DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1145/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்லத்துரை | த-பெ | சாத்தையா |
| ஊர்: | : | அரியக்குடி | | |
| வயது: | : | 52/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் அரியக்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் சந்தோஷ் ஆகியோர்களை தெரியும். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் சம்பவ சமயத்தில் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ யார் கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி, அடித்து காயப்படுத்தினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 29.05.2019 அன்று மதியம் 3.30 மணியளவில் சிந்து ராகன் என்பவருடன் அரியக்குடி பிரதான சலையில் நின்று பேசிக்கொண்டிருந்த போது அ.சா1 ஆடுகளை மேய்த்து விட்டு வந்து கொண்டிருந்ததாகவும், சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் இருசக்கர வாகனத்தில்வந்த நபர்கள் அந்த வழியாக சென்ற ஆட்டின் மீது மோதி ஆடு தூக்கி வீசப்பட்டதாகவும், அ.சா.1 அதனை பார்த்து கேட்டவுடன் எதிரிகள் அ.சா.1 ஐ கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி சண்முகம்என்பவர் அ.சா.1 கையால் ஓங்கி கன்னத்தில் அரைந்து கீழே

பிடித்து தள்ளியதாகவும், அ.சா.1ன் மகன் இது குறித்து கேட்டதற்கு லட்சுமணன் மற்றும் பிற எதிரிகள் ஒன்று சேர்ந்து அ.சா.1ஐ கைகலால் சரமாறியாக அடித்ததாகவும், சம்பவத்தை பார்த்து விலக்கி வைத்து எதிரிகளை அங்கியிருந்து அனுப்பியதாகவும், இந்த சம்பவத்தில் அ.சா.1 அணிந்திருந்த 4 பவுன் எடையுள்ள தங்க செயில் திருடு போயிவிட்டதாக சொன்னார். இது சம்மந்தமாக அ.சா.1 அளித்த புகாருக்கு ஆதரவாக ஒத்துழைப்பு செய்து விட்டு தற்போது நீதிமன்ற விசாரணையில்உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.11 10:07:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1145/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கனிகா | க-பெ | சந்துரு |
| ஊர்: | : | அரியக்குடி | | |
| வயது: | : | 27/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் அரியக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியாது ஆனால் புகார் அளித்த பிறகு விசாரணையின் போது அவர்கள் யார் என்று நான் தெரிந்து கொண்டேன். 29.05.2019 அன்று நான் வீட்டில் இருந்தேன் அப்போது எனது அம்மாவும் தம்பியும் ஆடு மேய்த்துக்கொண்டு வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். மதியம் 3.30 மணியளவில் அவர்கள் இருவரும் வீட்டிற்கு வரும் போது அரியக்குடி சீனிவாச நகர் சாலையை கடந்து வந்து கொண்டிருந்த போது அந்த சமயத்தில் அந்த வழியாக வந்த பெரிய இருசக்கர வாகனத்தில் 2 நபர்கள் வந்து ஆட்டினை மோதிவிட்டார்கள், இது குறித்து எனது தாயார் அவர்களிடம் ஏன் இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்களை மோதிய நபர்கள் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். அந்த சத்தம் கேட்டு நான் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்த போது அம்மாவை அந்த நபர்கள் அடித்துக்கொண்டிருந்தார்கள். உடன் இருந்த எனது தம்பியையும் அடித்துக்கொண்டிருந்தார்கள். மேலும் 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில்வந்து அம்மாவையும், தம்பியையும் கைகலால் தாக்கினார்கள். எனது தகப்பனார் சம்பவ சமயத்தில் டீ கடையில் இருந்தார். அவரிடம் இந்த தகவலை நான் சொன்னேன். உடனே எனது தகப்பனார் அங்கு வந்தார் பின்னர் இந்த சண்டை நிகழ்ந்து எனது தாயார் வீட்டிற்கு வந்த போது அவரது கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் தங்க செயினை காணவில்லை. மீண்டும் இந்த இடத்திற்கு சென்று பார்த்த போது செயின்

அங்கு இல்லை. மறு நாள் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி அ.சா.1 புகார் அளித்தார். காவல் நிலையத்திற்கு அம்மா, அப்பா, தம்பி ஆகியோர்கள் சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் சொன்ன 29.05.2019 என்ற தேதி போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சத்தம் கேட்டு தான் நான் சென்றேன். சம்பவ சடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் நான் RMR ஜவுளி கடையில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியின் கிழமை புதன் கிழமை என்றால் தெரியவில்லை. அன்றைய தினம் நான் RMR ஜவுளி கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடத்தாக சொல்லும் இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் இருக்கும். சம்பவம் நடத்தாக சொல்லும் இடத்திற்கும் எனது வீட்டிற்கும் 500 மீட்டர் இருக்கும் என்பதால் சத்தம் கேட்டதாக சொன்னால் அந்த சத்தம் கேட்காது என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறவில்லை அ.சா.1 எனது தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.11 10:07:18 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1145/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாக்கியலெட்சுமி | க-பெ | நாராயணன் |
| ஊர்: | : | அரியக்குடி | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

**எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் அரியக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். **அவைகள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4**. தேதி மாதம் நினைவில்லை சுமார் 8 வருடங்களுக்கு முன்பு எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு நாள் சந்தோஷ் என்பவர் வந்து கொண்டிருந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களுக்கும் அவர்களுக்கும் சண்டை ஏற்பட்டது அது சம்மந்தமாக நாங்கள் அதனை பார்த்து சண்டையை விலக்கி வைத்தோம். மற்றபடி எதனால் பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரம் தெரியாது. போலீசார் சம்பவ சமயத்தில் விசாரணை செய்யவில்லை. மேற்படி ஆவணங்களில் நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்தேன். மற்றபடி வழக்கு பற்றி எனக்கு எதுவும்தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார்விசாரணையில் கடந்த 30.03.2019 அன்று பகல் 13.30 மணிக்கு அரியக்குடி சாலை அன்னை இல்லம் அருகில் இருந்த போது அ.சா.1க்கும் வழக்கின் எதிரிகளுக்கும் இடையே நடைபெற்ற பிரச்சனை

குறித்து சம்பவயிடத்தை காரைக்குடி தெற்கு போலீசார் பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்திலும் மற்றும் நிகழ்விடத்தில் இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சி மகஜரிலும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது நீதிமன்ற விசாரணையில் உண்மை சம்பவங்களை மறைத்து பிறழ் சாட்சியம் அளிகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.11 10:07:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.